www.Padasalai.Net www.TrbTnpsc.com

For answers search this (@vskteaches) in YouTube.

# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

பதிவு எண்:

## தமிழ்

நேரம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

### பகுதி - 1

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 3×1=3

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ..................
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

2. பசியால் வாடும் ................ உணவளித்தல் நமது கடமை.
அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

3. அயோத்திதாசர் நடத்திய இதழ் ..............
அ) ஒரு பைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்
இ) அரையணாத் தமிழன் ஈ) அரைப்பைசாத் தமிழன்

2. கோடிட்ட இடத்தை நிரப்புக: 3×1=3

1. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ..............
2. வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் தலையாதது ............. இன்பம் ஆகும்.
3. நம்மை ............... பொறுத்துக் கொள்ள வேண்டும்.

3. வினாக்களைப் படித்து ஒன்றனுக்கு விடை தருக: 2×1=2

அ) வீரர்கள் எவற்றை அணிந்து சென்றனர்? வீரர்கள் எவ்வாறு சென்றனர்?

ஆ) அரசரைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல் எது? பசுவைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல் எது?

4. மொழிபெயர்க்க: 2×1=2

அ) Vowel ______ ஆ) SUPPORT

### பகுதி - 2

#### பிரிவு - 1

பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக: 5×2=10

5. உலகம் எவற்றால் ஆனது?
6. சான்றோர்க்கு அழகாவது எது?
7. எது பெருமையைத் தரும்?
8. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?
9. பகத்சிங் கண்ட கனவு யாது?
10. பயிர்கள் வாட்டமின்றி கிளைத்து வளரத் தேவையானது யாது?
11. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

#### பிரிவு - 2

பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக: 5×2=10

12. ஓவிய எழுத்து என்றால் என்ன?
13. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
14. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
15. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.
16. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
17. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
18. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?

#### பிரிவு - 3

பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக: 5×2=10

19. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
20. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

For answers search this (@vskteaches) in YouTube.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

For answers search this (@vskteaches) in YouTube.



21. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
22. இரட்டுற மொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?
23. இரவு பகல் எவ்வகைத் தொடர் என விளக்குக.
24. இயல்புப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
25. வல்லினம் மிகாத் தொடர்களைந்தினை எழுது.

## பகுதி - 3

### *பிரிவு - 1*

பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக: 2×4=8

26. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.
27. மழைச்சோறு எடுத்தபின் மழை எவ்வாறு பெய்தது?
28. உழவுத் தொழில் பற்றித் தகூர் யாத்திரை கூறுவன யாவை?

### *பிரிவு - 2*

பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக: 2×4=8

29. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
30. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?
31. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

### *பிரிவு - 3*

32. பொருத்துக: 4×1=4

| | | | |
|---|---|---|---|
| அ) இயற்கை ஓவியம் | - | 1. | சிந்தாமணி |
| ஆ) இயற்கைத் தவம் | - | 2. | பெரியபுராணம் |
| இ) இயற்கைப் பரிணாமம் | - | 3. | பத்துப்பாட்டு |
| ஈ) இயற்கை அன்பு | - | 4. | கம்பராமாயணம் |

### *பிரிவு - 4*

33. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்: 6×1=6
   1. *சரியான மரபுச் சொல்லை எழுதுக:* பால் .................... (குடி / பருகு)
   2. மாடு வயலில் புல்லை மேய்ந்தது - *இத்தொடரில் உள்ள வினைமுற்றை எழுதுக.*
   3. மலர் பானையை வனைந்தாள். - இத்தொடர் ............. பொருளைக் குறிக்கிறது. (அழித்தல் / ஆக்கல்)
   4. வாழையடி வாழையாக - *தொடரில் அமைத்து எழுதுக.*
   5. *இலக்கணக் குறிப்பு தருக* - வளர் தமிழ்
   6. *இரண்டு தொடர்களை ஓரே தொடராக்குக :*
      எனக்கு பால் வேண்டும். எனக்கு பழம் வேண்டும்

### *பிரிவு - 5*

34. பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்: 5×1=5

ஆற்றுதல் என்பது
        ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது
        புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது
        பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது
        தன்கிளை செறா அமை

For answers search this (@vskteaches) in YouTube.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

For answers search this (@vskteaches) in YouTube.



வினாக்கள்:

அ) அலந்தவர் என்பதன் பொருள் யாது?

ஆ) "பாடறிந்து" - சொல்லைப் பிரித்து எழுதுக.

இ) பாடலில் உள்ள எதுகைச்சொற்களை எழுதுக.

ஈ) இப்பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

உ) "போற்றுதல்" என்றால் என்ன?

## பகுதி - 4

**பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு விரிவான விடையளிக்கவும்:** 1×5=5

35. மனித யந்திரம் கதையை மீனாட்சி சுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.
36. காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
37. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் குறித்து தொகுக்க.

## பகுதி - 5

### *பிரிவு - 1*

38. **கட்டுரை வடிவில் விடையளிக்கவும்:** 1×7=7

அ) உழைப்பே உயர்வு (அல்லது)

ஆ) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

### *பிரிவு - 2*

39. **பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்:** 1×7=7

அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

## பகுதி - 6

**அடிமாறாமல் எழுதுக:** 2+2+3+3 = 10

40. "நவில் தொறும்" - எனத் தொடங்கும் குறள்.
41. விடல் - என முடியும் குறள்.
42. கற்றோர்க்கு - எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப்பாடல்
43. ஒன்றே குலம்- எனத் தொடங்கும் திருமூலரின் பாடல்

----------

For answers search this (@vskteaches) in YouTube.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com